not proper understanding the expansion could not be gone through and new building had not been acquired. Will the Hon. Minister tell us what steps he has taken to see that the Government is able to cope up with increasing number of patients that are coming to Madurai Erskine hospital?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: வருகின்ற பொது மக்கள் தங்குவதற்குக் கூடம் கட்டுவது பற்றிய விவரம் மட்டுந் தான் இருக்கிறது. விரிவுபடுத்தும் முயற்சிகள் பற்றிய விவரங்கள் வேண்டுமானால் தனிக் கேள்வி போடவும்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டப் பகுதிகள்

**37 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்:* மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

செங்கற்பட்டு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட போது 1969 அக்டோபரில் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: வீடு இழந்தோருக்கு உதவித் தொகையாக மொத்தம் ரூ. 2,990-ம் வெள்ளத்தால் சேத மடைந்த சாலைகள், குளங்கள் செப்பனிட வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் ரூ. 1,50,000-ம் செலவழிக்கப்பட்டது.

திரு. கொளத்தூர் கோதண்டம்: எந்தெந்த இடங்களில் எவ் வளவு செலவழிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அதைப் பற்றிய விவரங் கள் இல்லை.

நீலகிரி மாவட்டம் பண்ணை நிலங்கள் பேரில் அடிப்படைத் தீர்வை

**38 வினா—திரு. கே. போஜன்:* மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் தேயிலை, காப்பி முதலியன சாகுபடி செய்யப்படும் புஞ்சை நிலங்களுக்கு அடிப்படை நிலவரி வசூலித்து வருவது உண்மையா?

(இ) ஆம் எனில், நீலகிரி மாவட்டத்தில் மாத்திரம் நிலவரி வசூலிப்பதின் காரணம் என்ன?

(உ) இந்த அடிப்படை நில்வரியை ரத்து செய்ய, அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) ஆம்.

(இ) மலைப் பகுதிகளிலுள்ள பண்ணை நிலங்கள் புன்செய் நிலங்களாக வகைப்படுத்தப்பட்டிருந்த போதிலும, அவை சம வெளிகளிலுள்ள புன்செய் நிலங்களுக்கு இணையாகக் கருதப்படக் கூடாது என்று அரசு கருதுகிறது. எனவே, வருவாய்த்துறையின் 22-6-67ஆம் நாளிட்ட 1122ஆம் எண் அரசு ஆணையில் ஆணையிடப்

1970 ஆகஸ்ட் 26]

பட்ட அடிப்படைத் தீர்வைத் தள்ளுபடி, நீலகிரி மாவட்டம் உட்பட மலைப்பகுதிகளில் மலைத்தோட்டப் பயிர்கள் பயிர் செய்யப்படும் புன்செய் நிலங்கள் குறித்து அனுமதிக்கப்படுவதில்லை. அது போன்ற நிலங்கள் மீது தீர்வை வசூலிக்கப்பட்டு வருகிறது.

(உ) இவ்வினா எழவில்லை.

திரு. கே. போஜன்: தமிழக அரசு புஞ்சை நில வரியை ரத்து செய்து விட்டதாகச் சட்டம் இயற்றியதால் நீலகிரி மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் செஸ் வரியை இரட்டிப்பாக உயர்த்தி விட்டன. இதனால் சிறிய விவசாயிகள் கூட அதிகமாகக் கந்தாயம் கட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, தேயிலை, காப்பி பயிரிடும் சிறு விவசாயிகளுக்காவது இந்த அடிப்படை நில வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தமிழ்நாட்டில் புஞ்சை நிலங்களுக்கு அடிப்படை வரி எடுக்கப்பட்டிருக்கிறது. ரெவின்யூ அமைப்பு முறைகளில் மலைப் பகுதி நிலங்களும் புஞ்சை நிலங்கள் என்று வகைப்படுத்தப் பட்டிருக்கின்றன. ஆனால் மலைத் தோட்டம் சாதாரண புஞ்சை நிலங்களோடு சேர்க்கப்படக்கூடியதல்ல. அதைப் பற்றி நல்ல வகையில் ஆராய்ந்துதான் அது புஞ்சை நிலங்கள் என்ற பெயரில் இருந்தாலும் அதற்கு நிலவரி ரத்து தேவையில்லை என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

திரு. சோ. கருணைநாதன்: அன்றாட வாழ்க்கைச் செலவு அளவுக்கு வருவாய் வந்து கொண்டிருக்கின்ற அரை ஏக்கர், ஒரு ஏக்கர் வைத்திருக்கும் சிறு தோட்டக்காரர்களுக்காவது வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அடிப்படைக் கொள்கையைச் சொன்னேன். மலைத் தோட்டங்கள் தேசியமயமாக்கப் பட வேண்டுமென்ற கொள்கையே கூட பரவி வருகின்ற இந்த நாளில், அதைப் பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று சட்ட மன்றக் குழுக்களில் உறுப்பினர்கள் கூறுகின்ற இந்த நாளில், அதற்கு அடிப்படைத் தீர்வையை ரத்து செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அரசுக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்களே சொல்வது சரியானது அல்ல.

திரு. எம். சுரேந்திரன்: புஞ்சை நிலங்களுக்கெல்லாம் அடிப்படைத் தீர்வையை ரத்து செய்வது என்று முடிவு செய்துவிட்டு அதற்குப் பிறகு இம்மாதிரி நிலங்கள் புஞ்சை நிலங்கள் அல்ல என்று கருதப்படுகின்ற நிலை சிக்கலான நிலைமையை ஏற்படுத்தும். ஆகவே, வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு தீர்வையை ரத்துசெய்ய அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இதிலே சிக்கல் எதுவும் இல்லை. அந்தக் காலத்தில் இருந்தே ரெவின்யூ துறையில் இந்த நிலங்களையும் புஞ்சை நிலங்கள் என்று எழுதிய காரணத்தால் அதைப் புஞ்சை நிலங்கள் என்று அரசாங்கம் ஏற்றுக் கொள்ள

வேண்டியிருக்கிறது. உண்மையிலேயே அவை நல்ல வருவாய் தரக்கூடிய மலைத் தோட்டங்களாக இருப்பதால் வரியை ரத்து செய்ய முடியாத நிலை இருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : காப்பி, தேயிலை பயிரிடப்படுகின்ற நீலகிரி மாவட்டத்தில் மட்டும்தான் இந்த வரி வசூல் செய்யப்படுகின்றதா? அல்லது இது போன்று காப்பி, தேயிலை சாகுபடி செய்யப்படுகின்ற மற்றப் பகுதிகளில் இந்த வரி வசூலிக்கப்படுகின்றதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : எல்லா இடங்களிலுந்தான் வசூலிக்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தின் மீது எந்தக் கோபமும் அரசாங்கத்திற்குக் கிடையாது.

Elliots Beach at Madras

* 39 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether there is any proposal to make the Elliots Beach at Maras City a bathing resort; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) & (இ) எலியட்ஸ் கடற்கரையை அழகுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. குளிக்கும் வசதிகள் அமைத்தல் இத்திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : அந்தப் பகுதியில் பெரும்பாலும் வெளிநாட்டினர்தான் அதிகமாக நீராடுவதாகச் சொல்லப்படுகிறது. அந்த இடத்தை மேலும் நல்ல முறையில் அழகுபடுத்த அரசாங்கத்திடம் விரிவான திட்டம் இருக்கிறதா? எவ்வளவு செலவாகும்? எப்போது அமல்படுத்தப்படும்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்போது அந்த இடத்தில் வெளிநாட்டினர் மட்டுமல்லாமல் நம்முடைய நகர மக்களில் பெரும்பாலானவர்களும் குளிக்கிறார்கள். அதை விரிவுபடுத்தும் திட்டம் பற்றி மத்திய அரசாங்கத்திற்கு நம்முடைய அரசு எழுதியிருக்கிறது. அந்தத் திட்டத்தின் அடிப்படையில் நீச்சல் குளம், நீர்ச் சருக்கு விளையாட்டு இவை எல்லாம் இடம் பெற்றிருக்கின்றன. மத்திய அரசு இன்னும் அந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. அந்த ஒப்புதல் பெற்ற பிறகே எந்த அளவுக்குப் பணம் செலவாகும் என்று திட்டமாகச் சொல்ல முடியும்.

திரு. கே. விநயகம் : இந்த எலியட் பீச்சில் குளிக்கப் போகின்றவர்களுக்கு சுறா மீன்களால் அடிக்கடி ஆபத்து எற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அப்படி வருகின்ற சுறா மீன்களை வராமல் தடுப்பதற்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன ?